**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திரு. எம். சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை**
**2025 ம் வருடம் ஜனவரி மாதம் 08 ம் நாள் புதன்கிழமை**
**இடைக்கால மனு எண்.3/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.94/2023**

ரகுமத்பீவி
(மேற்படியாரின் பவர் ஏஜண்ட்
முகம்மது அலிஜின்னா மூலம்) ...மனுதாரர்/வாதி

..எதிர்..

ஷர்மிளாபேகம் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 04.01.2025–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது , மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.அன்பழகன் அவர்கள் முன்னிலையாகியும் , எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும் , இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து , வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் , இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

**உத்திரவு**

இம்மனுவானது, அசல் வழக்கில் வாதியின் பவர் ஏஜென்டாக வாதியின் மகனான முகம்மதுஅலிஜின்னா என்பவரை அதிகார முகவர் என்பதினையும் அங்கீகரித்து அசல் வழக்கினையும் மேல்நடத்துவதற்கு உத்தரவு விட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 3

விதி 1, 2 (1) r/w மற்றும் பிரிவு 151 சிபிசி–யின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

இவ்வழக்கு மனுதாரர் தாயாரான வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும் அதன் தொடர்ச்சியாக வழக்குச்சொத்தில் பிரதிவாதிக்கு அனுபவம் இருப்பதாக ஏற்கனவே இளையான்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் . 39/2010 தீர்வு காணப்பட்டுள்ளதால் வழக்குச் சொத்தினையும் இந்த பிரதிவாதியும் நிர்வில்லங்கமாய் ஒப்படைக்கத்தக்கதாய் சுவாதீனமீட்பு பரிகாரம் பிறப்பிக்க கேட்டு வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்றும் மேற்படி நம்பர் வழக்கின் மனுதாரரின் தாயாரும் உரிய முறையில் கிரையம் பெற்று அனுபவம் செய்து வரும் நிலையில் , வயதுமுதிர்வின் காரணமாக அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருவதால் அவரது மகனான இந்த மனுதாருக்கு கடந்த 31.08.2024ம் தேதி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி வழக்கு விபரங்கள் மற்றும் வழக்குச் சொத்துக்கள் பற்றி மனுதாரருக்கு நன்கு தெரியும் என்றும் அதனால் அசல் வழக்கில் வாதியின் பவர் ஏஜென்டாக வாதியின் மகனான மனுதாரரை அதிகார முகவர் என்பதினையும் அங்கீகரித்து அசல் வழக்கினையும் மேல்நடத்துவதற்கு உத்தரவு செய்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதார் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்:**

மனுவில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி

செய்யக்கூடியதாய் இருக்கிறது என்றும் வழக்குச் சொத்து சம்பந்தமாக வாதி கோரும் பரிகாரம் எதுவும் வாதிக்கு கிடைக்கக்கூடியதில்லை என்றும் மேலும் வாதி வயது முதிர்வின் காரணமாக அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருவதாகக் கூறுவதும் உண்மையில்லை என்றும் மேற்படி வழக்கை மேல்நடத்துவதற்கு தனது மகனான முகம்மது அலி ஜின்னாக்கு கடந்த 31.08.2024ம் தேதி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதாக கூறுவதும் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும் வாதியான ரகுமத்பீவி தாவா வழக்கு விசாரணையில் ஆஜராகுவதை தவிர்க்கும் நோக்கத்துடன் பின் யோசனையின் பேரில் மனுதார் குறிப்பிடும் 31.08.2024ம் தேதியிட்ட பொது அதிகார பத்திரமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் வாதியின் கணவரான சிபாயத்துல்லா மூலம் ஆவணங்களை உற்பத்தி செய்து மேற்படியாரால் வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில் வழக்கை பற்றிய உண்மை விபரம் எதுவும் வாதிக்கு தெரியாத நிலையிலேயே 31.08.2024 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் உற்பத்தி செய்யப்பட்டு இம்மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆகையால் இந்த மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் இவ்வழக்கு மனுதாரர் தாயாரான வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும் அதன் தொடர்ச்சியாக வழக்குச்சொத்தில் பிரதிவாதிக்கு அனுபவம் இருப்பதாக ஏற்கனவே இளையான்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 39/2010 தீர்வு காணப்பட்டுள்ளதால் வழக்குச் சொத்தினையும் இந்த பிரதிவாதியும் நிர்வில்லங்கமாய் ஒப்படைக்கத்தக்கதாய் சுவாதீனமீட்பு பரிகாரம் பிறப்பிக்க கேட்டு வழக்கு

தாக்கல் செய்து பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்றும் மேற்படி நம்பர் வழக்கின் மனுதாரரின் தாயாரும் உரிய முறையில் கிரையம் பெற்று அனுபவம் செய்து வரும் நிலையில் , வயதுமுதிர்வின் காரணமாக அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருவதால் அவரது மகனா மனுதாரருக்கு கடந்த 31.08.2024 ம் தேதி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அதனால் அசல் வழக்கில் வாதியின் பவர் ஏஜென்டாக வாதியின் மகனான மனுதாரரை அதிகார முகவர் என்பதினையும் அங்கீகரித்து அசல் வழக்கினையும் மேல்நடத்துவதற்கு உத்தரவு செய்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில்வாதி வயது முதிர்வின் காரணமாக அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருவதாகக் கூறுவதும் உண்மையில்லை என்றும் மேற்படி வழக்கை மேல்நடத்துவதற்கு தனது மகனான முகம்மது அலி ஜின்னாக்கு கடந்த 31.08.2024 ம் தேதி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதாக கூறுவதும் ஆட்சேபிக்கப்படுகிறது என்றும் வாதியான ரகுமத்பீவி தாவா வழக்கு விசாரணையில் ஆஜராகுவதை தவிர்க்கும் நோக்கத்துடன் பின் யோசனையின் பேரில் மனுதார் குறிப்பிடும் 31.08.2024 ம் தேதியிட்ட பொது அதிகார பத்திரமும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் வாதியின் கணவரான சிபாயத்துல்லா மூலம் ஆவணங்களை உற்பத்தி செய்து மேற்படியாரால் வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில் வழக்கை பற்றிய உண்மை விபரம் எதுவும் வாதிக்கு தெரியாத நிலையிலேயே 31.08.2024 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் உற்பத்தி செய்யப்பட்டு இம்மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்கண்டவாறு இருதரப்பிலும் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலினை செய்து

பாரக்கின்ற போது எதிர்மனுதாரர் தரப்பில் பொது அதிகார ஆவணத்தின் படி தனது தாயாருக்காக வழக்கை மேல்நடத்துவதற்கு அனுமதி கோருவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்று கூறப்பட்டுள்ள நிலையில் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொது அதிகார ஆவணத்தை பரிசீலினை செய்து பார்க்கின்ற போது நீதிமன்றத்தில் வழக்கு நடத்துவதற்காக மட்டும் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் வழக்கை மேல் நடத்துவதற்கு அனுமதி கோருவது சட்டப்படி ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என்று எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்படுள்ளது ஏற்புடையதல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது . இந்நிலையில் மனுதாரர் தாரப்பில் மனுதாரரின் தாயாரான வாதிக்கு வயது முதிர்வு காரணமாக உடல்நிலை அடிக்கடி சரியில்லாமல் இருந்து வருவதால் வாதிக்காக வழக்கினை இந்த மனுதாரரான வாதியின் மகன் பவர் ஏஜெண்ட் நிலையில் நடத்துவதற்கு அனுமதியளித்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பார்க்கின்ற போது இந்த மனுவினை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது . செலவுத் தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு

பின் என்றால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 8ம் நாளான இன்று என்னால் இந்த உத்திரவு அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**

சார்பு நீதிபதி,
மானாமதுரை

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**

சார்பு நீதிபதி,
மானாமதுரை